# 5

# பெரிய அறுவை சிகிச்சைத் தேவைப்படும் ஒரு சபை

## (1 கொரிந்தியர் 5:1-13)

*பவுல் தேவனுடைய போதனைகளை கொரிந்துப் பட்டணத்து சபைக்கு கொடுத்ததைப் பயன்படுத்தி, சபையில் உள்ள பிரச்சனைகளை எப்படித் தீர்வு காண்பது என்பதைக் குறித்து விவாதிக் கொண்டு வருகிறோம். சில வேளைகளில் சபையிலுள்ள பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அதிகமான போதனையும் அதிகமான புள்ளி விவரத் தகவல்களும் தேவைப் படலாம்; விவாகத்தைக் குறித்த கேள்விக்கு பதில் அளிக்க அதுதான் தேவைப்பட்டது (அதிகாரம் 7). வேறு சூழ்நிலைகளில் கள்ள உபதேசத்தை கடிந்து கொள்ளுதல் தேவைப்படும், உயிர்த்தெழுதலைக் குறித்து பவுல் எதிர் கொண்ட பிரச்சனை அப்படிப்பட்டது (அதிகாரம் 15). அடிக்கடி சிறந்த மனநிலை தேவைப்படும்; மனுஷர்களைப் பின்பற்றி உலக ஞானத்தை மதிப்பிடும் சபை அங்கத்தினர்களின் பிரச்சனைகளுக்கு பவுலின் சிபாரிசு அது தான் (அதிகாரங்கள் 1-4). சபை பிரச்சனைகளைத் தீர்க்க எப்பொழுதுமே தேவைப்படுவது அன்பை வலியுறுத்துவது தான். பவுல் இந்த பெரிய கருத்தை அதிகாரம் 13ல் விளக்கப்படுத்துகிறார்.*

*சில நேரங்களில் சபையின் பிரச்னைகளை சரி செய்ய கண்டிப்புடன் கூடிய நடவடிக்கைத் தேவைப்படுகிறது. இது தான் 5:1-13ல் காணப்படும் பிரச்சனை பற்றியதாக உள்ளது.*

*கொரிந்துவிலிருந்த சபை பிரச்சனை மிகுந்த ஒரு சபையாக இருந்தது, மற்றும் அதிகாரம் 5ல் பவுல் அப்படிப்பட்ட பிரச்சனைகளில் ஒன்றை முன் வைத்துப் பேசுகிறார். ஒரு சகோதரன் பாலியல் ரீதியான குற்றமுடையவனாய் வெளிப்படையாகக் காணப்பட்டான்- அஞ்ஞானிகளைக் கூட குற்றப்படுத்தக் கூடாத அளவுக்கு ஒழுக்கக் கேடுகள் மலிந்திருந்தன![1]*

*இந்த சூழ்நிலையைக் குறித்து என்ன செய்யக் கூடும்? சபை இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை, ஆனால் அவர்கள் கேட்டிருக்க வேண்டிய கேள்வி அது. ஆயினும் பவுல் அதற்கு பதில் கொடுத்தார். கொரிந்துவிலிருந்த சரீரத்தைப் பாதுகாக்க வேண்டும், எனவே, அந்தச் சரீரத்திலிருந்த ஒரு அங்கத்தை வெட்டியெடுக்க வேண்டியதாயிருந்தது. கொரிந்துவிலிருந்த வெளிப்படையானதும் ஒழுக்ககேடானதுமான பிரச்சனைக்குத் தீர்வு (பதில்) "அந்தப் பொல்லாதவனை உங்களை விட்டுத் தள்ளிப் போடுங்கள்" (5:13) என்றார்.*

*புதிய ஏற்பாட்டில் 1 கொரிந்தியர் 5-ம் அதிகாரம் தான் சபையின் ஒழுங்குபடுத்தும் சிட்சையை விவாதிக்கும் அதிகாரமாகும். சம்பந்தப் பாடத்தைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை நாம் அறிய வேண்டும். நாம்*

*அறிந்து கொள்வது மட்டுமல்ல, அவைகளைக் கைக்கொள்ளவும் வேண்டும். சில உள்ளூர் சபைகள் தங்களுடைய பிரச்சனைகளை சரி செய்துகொள்ள என்ன செய்ய வேண்டுமெனில், ஒரு மாத்திரையை விழுங்குவதோ, ஒரு ஊசியைப் போட்டுக் கொள்வதோ, அல்லது மருத்துவமனையில் சேர்ந்து சில நாட்கள் ஓய்வெடுப்பது போன்றதோ அல்ல, பெரிய அறுவைச் சிகிச்சை செய்து - சரீரத்திலிருக்கிற மற்ற அங்கத்தினர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிற அந்தப் "பொல்லாதவனை நடுவிலிருந்து" விலக்கிப் போட வேண்டும். ஐக்கியத்திலிருந்து விலக்குதல் என்பது குறித்து வசனம் போதிக்கும் பாடத்தை பரிசீலிப்போம். (மேலும் காண்க 2 தெசலோனிக்கேயர் 3:6; 1 தீமோத்தேயு 6:5;* KJV.)

## பாதிப்பை ஏற்படுத்தும் தீமையானவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளுதல்

*ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டிய நபரிடமிருந்து அவரது நடத்தையைக் குறித்து நமக்கு என்ன தெரியும் அவர் உச்சக்கட்ட பாவத்தை செய்த குற்றமுடையவராக இருந்தார். ஒரு மனிதன் தன் "தகப்பனாருடைய மனைவியை" வைத்துக் கொண்டிருந்தான் (5:1). இன்னொரு வார்த்தையில் சொன்னால், தன்னுடைய ஒன்றுவிட்ட தாயாருடன் வாழ்ந்து, பாலியல் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவனின் பாவம் மோசேயின் பிரமாணத்தில் கூடத் தெளிவாக கண்டனம் பண்ணப்பட்ட பாவமாயிருந்தது (லேவியராகமம் 18:8). கொரிந்து போன்ற அக்கிரமம் நிறைந்த பட்டணத்தில்கூட, இந்த பாவம் - சட்டத்தால் தடை விதிக்கப்பட்ட இந்த பாவம் - பொதுவானதல்ல, அருவருப்பானது.[2] எப்படியிருப்பினும் சபையில் சகித்துக் கொள்ளக் கூடாத பாவம் இது மட்டுமே என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக் கூடாது. இதே அதிகாரத்தில் பவுல், சகோதரர்கள் ஐக்கியத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டிய மற்றவைகளைப் பற்றியும் குறிப்பிட்டார் (5:11). இந்த வசனப் பகுதி மட்டுமே இந்தப் பாடத்தைக் குறித்து பேசும் தேவனுடைய ஒரே வசனமல்ல. மற்ற வசனங்களிலும் கூடுதலான பாவங்களைப் பற்றிப் பேசுகின்றன, அவை நாம் ஐக்கியத்தில் சகித்துக் கொள்ளக் கூடாதவைகள். அவைகள், 2 தெசலோனிக்கேயர் 3:6, 14, 15ல், ஒழுங்கற்றுத் திரிகிறவர்களிடத்திலிருந்தும், புதிய ஏற்பாட்டின் உபதேசங்களின்படி வாழ மறுக்கிறவர்களிடத்திலிருந்தும் சகோதரர்கள் ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளும்படி சகோதரர்களுக்குச் சொல்லப்பட்டது. தொடர்ந்து, மத்தேயு 18:15-17ல் பாவஞ் செய்து மனந்திரும்பாதவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ளச் சொல்லுகிறது. ஆகையால் வெளிப்படையாய் ஒருவரால் நடப்பிக்கப்படும் எந்த வகையான பாவமும் மனந்திரும்பாமல் போனால் அப்படிப்பட்ட சபை அங்கத்தினரிடமிருந்து சபை தனது ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள அதுவே காரணமாகும்.*

*கள்ளப் போதனைகளைப் பற்றி என்ன? கள்ளப் போதனை செய்வோரிடமிருந்து நாம் ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டுமா? கொரிந்து சபையிலிருந்த சில சகோதரர்கள் உயிர்த்தெழுதல் உண்டு என்பதை விசுவாசிக்க வில்லை, இருந்தும் பவுல் சபைக்கு எழுதி அவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கி கொள்ளச் சொல்லவில்லை என்பது ஆர்வத்தைத் தூண்டும் செய்தியாக உள்ளது. கள்ளப் போதகர்களைக் குறித்து தொடர்ந்து சபை எச்சரிக்கப்பட*

வேண்டும் என்பது திருமறையின் போதனை.[3] கள்ளப் போதகர்களைக் குறித்துக் கொண்டு,[4] அவர்கள் எதிர்க்கப் படவும்,[5] வாய்கள் அடைக்கப் படவும்,[6] அவர்களுக்கு வாழ்த்துக்கள் சொல்லாமலும்[7] இருக்க வேண்டும். ஒரு மனிதன் கள்ளப் போதகன் என்று அறியப்பட்டிருந்தால், அவனுக்கு உதவி செய்யவோ, அவனை அழைப்பித்து சபையில் பேச வைக்கவோ கூடாது. ஒரு கள்ளப் போதகர் சபையிலே சண்டையை உண்டு பண்ணி பிரிவினைகளை ஏற்படுத்தக் கூடியவனாயிருந்தால், அவன் பாவத்தைச் செய்தவன்[8] ஆதலால் சபை நடவடிக்கைக்கு அவன் கட்டுப் பட்டவன். எப்படியாயினும், ஒரு நபர் திருமறை போதிக்கும் சில கருத்துக்களைக் குறித்து தவறான கண்ணோட்டத்தில் இருந்தால் சபை அவனிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று திருமறை எந்தக் குறிப்பையும் கொடுப்பதில்லை.

## ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதில் சரியான மனப்பாங்கு

அடுத்த வசனப் பகுதி ஐக்கியத்திலிருந்து விலக்கப்படுகிற நபரைக் குறித்து சபை எப்படிப்பட்ட மனப்பாங்கு உள்ளதாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. கொரிந்து சபையிலிருந்த அங்கத்தினர்கள் முரண்பட்ட மனப்பாங்கைத் தங்களுக்குள் கொண்டிருந்தனர், ஆகிலும் அவர்கள் முறையாய் கொண்டிருக்க வேண்டிய மனப்பாங்கு அவர்களிடம் இல்லை. “துக்கப்படுவதற்குப் பதிலாக” அவர்கள் இறுமாப்புடையவர்களாயிருந்தனர் (5:2). அவர்கள் ஒரு வேளை மேன்மை பாராட்டக் கூடியவர்களாயிருந்தனர் (5:6), அது அவர்களுடைய திறந்த மனம் அல்லது “சகிப்புத் தன்மையினால்” இருந்திருக்கலாம். ஒருவேளை பாவிகளுக்கு இரக்கம் காட்டக் கூடியவர்களாய் அவர்களிடம் அன்பு பாராட்டும் தன்மையைக் குறித்து அப்படிச் செய்திருக்கலாம். மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் கட்டுப் பாடுகள் தங்களை உட்படுத்தாது எனும் ரீதியில், இறுமாப்போடு கூட, மிகுந்த அன்பு காட்டுவோராய், ஒழுக்கக் காரியங்களில் அதிக சுதந்திரம் பெற்றவர்களாயிருக்கத் தீர்மானித்து செயல் பட்டிருக்கலாம். அவர்களுடைய இறுமாப்பு தவறானது. ஒரு சகோதரன் பாவத்திற்குட்படும் போது சபை துக்கப்பட வேண்டும். நாம் “ஒருவருக்கொருவர் அங்கங்களாயிருக்கிறோம்” (எபேசியர் 4:25); ஒரு அங்கத்தினருடைய பாவம் எல்லா அங்கத்தினர்களையும் பாடுபடச் செய்யும்.

நாம் ஐக்கியத்திலிருந்து விலகிக் கொள்ளும்போது, நம்முடைய மனப்பாங்கு மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது. நாம் அன்பின் மனப்பாங்கைக் கொண்டிருக்கவேண்டும்! அன்பும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையும் ஒன்றுக்கொன்று எதிரானவையல்ல. கர்த்தர் தாம் அன்புகூருபவர்களைச் சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:6). சிட்சித்தல் என்பது அன்பின் வெளிப்படுத்துதலாக இருக்கிறது.

ஐக்கியத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட ஒரு சகோதரன் மறுபடியும் திரும்பிவரும் போது நம்முடைய மனப்பாங்கு எப்படியிருக்க வேண்டும்? இதற்கான பதில் 2 கொரிந்தியர் 2:5-8ல்[9] காணப்படுகிறது. கொரிந்துவிலே ஒரு சகோதரன் நடவடிக்கைக்கு உட்பட்டு நீக்கப் பட்டான், ஆகிலும் அதன் விளைவாக அவன் மனந்திரும்பினான் என்று தெரிகிறது. அவன் துக்கத்தில்

மூழ்கிப் போய் விடாதபடிக்கு, அவர்கள் அவனிடத்தில் கொண்டுள்ள அன்பை மறுபடியும் உறுதிப் படுத்தும்படி அறிவுறுத்தப் பட்டனர். பாவத்திலிருந்த ஒரு சகோதரன் திரும்பவும் கர்த்தரிடத்தில் வரும் போது, நாம் அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும் - கெட்டுப் போன குமாரன் தன்னுடைய தகப்பனிடத்தில் வந்த போது அவர் அவனை ஏற்றுக் கொண்டு சந்தோஷப் பட்டது போல நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டும் (லூக்கா 15:11-24).

## ஐக்கியத்திலிருந்து விலக்க செயல்படும் முறை

ஒருவரிடத்திலிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டிய வேளையில் செய்ய வேண்டிய சில செயல்களை தேவன் குறிப்பிட்டிருக்கிறார். பாவத்தில் சென்று கொண்டுள்ள ஒரு சகோதரனை ஐக்கியத்திலிருந்து விலக்குவது முதல் படியல்ல என்பதை மனதில் வைக்கவேண்டும். மற்ற வசனங்கள் குறிப்பிடுகையில். அந்த சகோதரனிடத்தில் போய் அவரை மறுபடியும் கொண்டு வர முயற்சிக்கும் படி போதிக்கிறது (கலாத்தியர் 6:1; யாக்கோபு 5:19, 20).

மத்தேயு 18:15-17 ஐக்கியத்திலிருந்து விலக்குவதற்கு முன்பாக மூன்று படிகளை முறைப் படுத்துகிறது: (1) பாவம் செய்த சகோதரனிடத்தில் ஒரு கிறிஸ்தவன் தனித்துப் போய் பேச வேண்டும். இந்த சந்திப்பின் நோக்கம் அவனுடைய மனந்திரும்புதலைத் தேடித்தான். அவன் மனந்திரும்பி விட்டால், அவன் மன்னிக்கப்பட வேண்டும்; அப்பொழுது மேற் கொண்டு எதுவும் செய்யாமல் அத்துடன் நின்று விடும், ஏனெனில் “உங்கள் சகோதரனை நீங்கள் ஆதாயப்படுத்திக்கொண்டீர்கள்.” (2) ஒருவர் தனித்து சந்தித்த பின்பும் அவன் மனந்திரும்பாமல் போனால், அடுத்த சந்திப்பிற்கு அவருடன் மேலும் ஒருவரோ இரண்டுபேரோ செல்ல வேண்டும். மறுபடியும், இந்தச் சந்திப்பின் முதல் நோக்கம் அந்த சகோதரனை மனந்திரும்பச் செய்வதே; சம்பந்தப் பிரச்சனையின் சரியான நிலையை உறுதிப் படுத்தவே இந்தச் சந்திப்பு. அவன் மனந்திரும்பி விட்டால், அவன் மன்னிக்கப் பட வேண்டும். அவர்களுக்கும் அவன் “செவி கொடுக்க மறுப்பானேயாகில்,” மூன்றாவது படி அவசியமாகிறது. (3) “சபைக்குத் தெரியப்படுத்தவேண்டும்.” இப்பொழுதும் பாவம் செய்த சகோதரனை மனந்திரும்பச் செய்வதே இதன் நோக்கம். அவன் சபைக்கு செவி சாய்க்கும் பட்சத்தில், கண்டனம் பண்ணப்பட்ட மனிதன் தன் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்வான். அவன் சபைக்கும் செவி கொடாமல் போனால் -தனிப்பட்டவரின் அல்லது ஒட்டு மொத்த மக்களின் சப்தமாகிய எச்சரிக்கை மற்றும் ஊக்கமளிக்கும் சபையின் முழு சப்தத்துக்கும் செவி கொடாத போது - அந்த சகோதரனை ஐக்கியத்திலிருந்து நீக்கித் தான் ஆக வேண்டும்.[10] கிறிஸ்தவர்கள் அவனோடு கலந்திருக்கக் கூடாது. மற்ற எல்லா முயற்சிகளும் பயனளிக்காத போது, ஐக்கியத்திலிருந்து அந்த சகோதரனை நீக்குவது தான் கடைசிப்படி.

நாம் அந்த நடவடிக்கை எடுக்கும் போது, செயல்கள் ஆழமனதிலிருந்து வருகிற சுபாவம் என்பதைக் கவனிக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் நம்மோடிருந்து, அவர்களின் தீர்ப்புப்படி நாம் செயல் படுகிறோம் (1 கொரிந்தியர் 5:3, 4), முழு சபையும் முன் நிற்கிறது (5:4). மூப்பர்களாலோ பிரசங்கியார் (களாலோ) இது செய்யப்படுவதில்லை, முழு சபையும் செயல் படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவின் வல்லமை அல்லது அதிகாரத்தின் பேரில் இது நடப்பிக்கப் படுகிறது (5:4). இது எல்லாருக்கும் முன்பாக செய்யப் படுவது: “அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்

கொடுக்க வேண்டும்" (5:5). சபை வெளிப்படையாக அறிவித்து ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டவர் சபையில் உள்ளவர்களுடன் ஒருவராக எண்ணப்பட மாட்டார் என்று சொல்ல வேண்டும். சாத்தான் அவனுடைய வாழ்க்கையில் அதி காரம் செலுத்துகிறான்; அவனை ஐக்கியத்திலிருந்து நீக்குவதன் மூலம், அந்த அதிகாரத்தை சபை புரிந்து கொண்டிருக்கிறது.[11]

ஒரு அங்கத்தினரிடத்திலிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள சபை சரியான முறையில் செயல் பட வேண்டும்! மற்றெல்லாவற்றோடே, சங்கதிகளெல்லாம் உறுதிப் படுத்தப்பட வேண்டும். எந்த ஒரு பாகுபாட்டிற்கும் இடமளிக்கக் கூடாது. (உதாரணமாக, சபையின் முன்னோடிகளின் குடும்பத்தாரை மற்றவர்களைக் காட்டிலும் தயை காட்டி நடத்தக் கூடாது.) பாவம் செய்த அங்கத்தினர் மற்ற சபை அங்கத்தினர்களால் தனிப்பட்ட முறையில் சந்திக்கப் பட வேண்டும். சபையின் அங்கத்தினர் முழுவதும் இதில் ஈடுபடுத்தப்பட வேண்டும், மற்றும் அந்த சபை அங்கத்தினருக்கும் சபைக்கும் இடையே (எந்த வித பழி வாங்கும் செயலுக்கும் சிறு துக்கத்துக்கும் இடங் கொடாமல்) அன்பே முழுமையான செயல் வடிவம் கொண்டிருக்க வேண்டும். பாவஞ் செய்த அங்கத்தினரின் மனந்திரும்புதலையே தேட வேண்டும்.

சில வேளைகளில் சபையின் ஒழுங்கு நடவடிக்கையை செயல் படுத்தும் போது தீர்வுக்குப் பதிலாக அதுவே பிரச்சனைகளாக மாறிவிடும். ஏறத்தாழ எப்பொழுதுமே, திருமறையின் வழி காட்டலைத் தவிர்த்து, செயல் பாட்டில் மட்டும் கவனம் செலுத்துவதே தவறு நடக்க ஏதுவாகிறது.

## ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதற்கான காரணங்கள்

ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதற்கான சரியான காரணங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார். மனந்திரும்பாத பாவியிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள குறைந்த பட்சம் இரண்டு காரணங்கள் உண்டு.

*முதலாவதாக, சரியான ஒழுங்கு நடவடிக்கை தனிப்பட்டவரின் இரட்சிப்பாகிய - நல்லதுக்காகத் தான்* (5:5). "அப்படிப்பட்டவனுடைய மாம்சத்தின் அழிவுக்காக" என்பது அவனுடைய வாழ்க்கையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிற பாவ இச்சைகளின் அழிவுக்காக.[12] "அவனுடைய ஆவி கர்த்தராகிய இயேசுவின்" நாளிலே இரட்சிக்கப்படும்படி என்பது பரலோகத்திலே அவனுடைய ஆத்துமா முழுமையாக இரட்சிக்கப்படுவதைக் குறிக்கிறது.

*இரண்டாவதாக, ஐக்கியத்திலிருந்து விலக்கிக் கொள்வது சபைக்கு நல்லது* (5:6-8). "கொஞ்சம் புளித்தமா பிசைந்த முழுவதையும் புளிப்பாக்கும்" (5:6). குற்றஞ் சுமத்தப்பட்ட சகோதரனின் பாவம் முழு உள்ளூர் சபையையும் பாதிக்கக் கூடும். கண்டித்து உணர்த்தப் படாத எந்தப் பாவமும் சபையிலே மோசமான பாதிப்பை ஏற்படுத்தும். கள்ளப் போதகனை தொடர்ந்து அனுமதிப்பதன் மூலம் பிரிவினையும் தொடர்வதோடு, ஒரு உள்ளூர் சபையை அழித்து விடும். பாவஞ் செய்கிறவரின் முன் மாதிரியை மற்றவர்கள் பின் பற்றுவார்கள் - அல்லது அங்கத்தினர்கள் "அவன் அதைச் செய்தால், நான் இதைச் செய்யக் கூடும்" என்று சொல்லுவார்கள்.

ஒரு உள்ளூர் சபையிலே நடக்கும் வெளிப்படையான பாவம் சகித்துக் கொள்ளப்படும்போது, பாவத்தை மன்னித்து விட்டுவிடுகிறோம் என்று மற்ற மக்கள் நினைத்துக் கொள்ள வழி வகுக்கும். அப்பொழுது

சபை பரியாசத்துக்குள்ளாகி, சமுதாயத்தின் ஏளனத்துக்கு வழி வகுக்கும். கிறிஸ்தவர்களால்லாதவர்கள், “அவர்கள் அப்படிப்பட்ட நடத்தையை ஏற்றுக் கொள்வார்களானால் ஒருபோதும் நான் அந்த சபையில் அங்கம் வகிக்க மாட்டேன்” என்று சொல்லக் கூடும். இதை விட மோசமாக, சிலர் “அப்படிப் பட்டசெயல்களை அவர்கள் அனுமதிப்பார்களேயாகில், நானும் அங்கே அங்கம் வகிக்க விரும்புகிறேன்-அப்பொழுது நான் விரும்புகிறபடியெல்லாம் வாழ்ந்து கொண்டே சுத்த மனச் சாட்சியுள்ளவனாவேன்” என்று நினைக்கக் கூடும்.

நாம் புதிதாய்ப் பிசைந்தமாவாய் இருக்கும் படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போட்டு “பழைய புளித்த மாவோடே அல்ல, பொல்லாப்பு, துர்க்குணம் என்னும் புளித்த மாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்” (5:7, 8). நாம் ஆசரிக்கும் “பண்டிகை” என்பது கர்த்தருடைய பண்டிகையை குறிப்பிடலாம். அப்படியிருக்குமானால், குற்றஞ்சாட்டப்பட்ட அங்கத்தினன் ஐக்கியத்திலிருந்து விலக்கப்படும்போது, நாம் கர்த்தருடைய பந்தியை “உண்மை மற்றும் சத்தியம்” (துப்புரவு) ஆகியவற்றுடன் ஆசரிப்போம் என்று பவுல் கூறினார். பொல்லாப்பு, துர்க்குணம் ஆகியவற்றை நம் மத்தியிலிருந்து அகற்றும் போது மட்டுமே இது சாத்தியமாகும்.

சபையின் ஒழுங்கு நடவடிக்கை உண்மையில் சபையின் வளர்ச்சியை உற்சாகப் படுத்தும். அடக்கமற்ற இரண்டு அங்கத்தினர்கள் (அனனியா, சப்பீராள்) மீது தேவனே ஒழுங்கு நடவடிக்கை எடுத்த போது. “சபையாரெல்லாருக்கும் இவைகளை கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று”; ‘‘திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிக அதிகமாய்ச் சேர்க்கப் பட்டார்கள்” (நடபடிகள் 5:11, 14). வெளியிலிருப்போர், மனங் குத்தப் பட்டவர்களாய், ஒழுங்கு நடவடிக்கையை மிகவும் சிந்தையாய் எடுக்கும் ஒரு உள்ளூர் சபையைக் கண்ணுறும் போது, சபையின் மீது ஒரு ஈர்ப்புத் தன்மையைப் பெற்றுக் கொள்ளலாம். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விரும்பும் மக்கள் உள்ளூர் சபை அவரினிமித்தம் அர்ப்பணிப்பை வினயமாக எடுத்துக் கொள்வதால் அதிலே அங்கம் வகிக்க விரும்பக் கூடும்.

## ஐக்கியத்தை விலக்குவதால் ஏற்படும் விளைவுகள்

ஐக்கியத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டபின் விலக்கப் பட்டவர் எப்படி நடத்தப்பட வேண்டும்? அடிப்படையில் நாம் அவரோடே “கலந்து இருக்கக் கூடாது” (5:9); நாம் “அவருடன் நட்பு கொண்டிருக்கக் கூடாது” (KJV). 5:10-13ல், கொரிந்தியர்களின் தப்பான எண்ணங்களை பவுல் தெளிவாக்குகிறார். ஏற்கனவே எழுதிய நிருபத்தில் தீமையானவர்களோடே கலந்திருக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். அவர்கள் இவ்வுலகத்தில் தீமை செய்பவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாது என்று அவர்கள் நினைத்தது போல் தெரிகிறது. பவுல் அவர்களிடம் அப்படி முற்றிலும் கலவாமலிருக்க இயலாது என்று குறிப்பிடுகிறார் (5:10). நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை நியாயந்தீர்ப்பதோ, கண்டனம் பண்ணுவதோ முறையல்ல; தேவனே அவர்களின் நியாயாதிபதி (5:12, 13). இங்கு பவுல் போதிக்கும் போதனையை, “அவிசுவாசியோடே பிணைந்திருக்கக் கூடாது” என்றும் (2 கொரிந்தியர் 6:14), “ஆகாத சம்பாஷனை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்” என்ற எச்சரிக்கையையும் (1 கொரிந்தியர்

15:33) கொடுக்கிறதான வசனங்கள் தகுதிப்படுத்துகின்றன.

எப்படியிருப்பினும், 5:9ல்[13] குறிப்பிடப்படுகிற நிருபத்தில் உலகத்திலிருக்கிற மற்றவர்களைப் பற்றி பவுல் பேசவில்லை; சபையிலிருப் பவர்களைக் குறிப்பிட்டு பேசுகிறார். இதன் அடிப்படையில் சபை தீர்ப்பு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஐக்கியத்திலிருந்து விலக்கப் பட்ட கிறிஸ்தவனிடத்தில் நாம் ஐக்கியம் கொள்வதற்கு கொடுக்கப்பட்ட சில வரையறைகள் கிறிஸ்தவர்களல்லாதவர்களிடம் கொண்டிருக்கும் ஐக்கியத்திற்குப் பொருந்தாது. வசனம் 11ல் நாம் ஐக்கியம் வைக்கக் கூடாத அளவீடுகளைக் காணுகிறோம்: கொரிந்து சபையார்கள் இப்படிப்பட்டவனோடே புசிக்கவும் கூடாது. முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த நெருங்கிய ஐக்கியம் அதற்கான வரை முறைகள் அந்தந்த வசனப் பகுதியைக் கொண்டு புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒன்றாக அமர்ந்து புசிப்பது அவர்களுடைய பழக்கம். அப்படிப்பட்ட ஐக்கியத்திலிருந்து விலக்குதல் முறையான விளைவை ஏற்படுத்த, இன்று நாம் ஒருவருக்கொருவர் நெருக்கமான ஐக்கியம் கொண்டிருக்க வேண்டும். சபை அங்கத்தினர்கள் ஒன்றாக அமர்ந்து புசியாதிருந்தால் அது எப்படிப் பட்ட வித்தியாசத்தை ஏற்படுத்தப் போகிறது. புசிக்கிற ஐக்கியம் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. இந்த சமத்துவ ஒருவரையொருவர் சார்ந்த உணவு உண்ணும் பழக்கம், ஒரு சரீரத்தின் அவயவங்களாக உண்டு மகிழ்கிறோம், இதை பாவஞ் செய்ததினிமித்தம் விலக்கப் பட்டவருடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது.[14]

ஐக்கியத்தை விலக்கிக் கொண்ட பிறகு, விலக்கப்பட்ட சகோதரனுக்கும் சபையில் இருக்கும் மற்ற அங்கத்தினர்களுக்குமிடையேயான உறவுமுறை வித்தியாசப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவனுக்கு அதற்கு முன்பாக சக கிறிஸ்தவர்களுடன் நெருக்கமான நட்பு இருந்தது; அவர்கள் ஒன்றாக அமர்ந்து புசித்தவர்கள். ஆனால் இப்பொழுதோ, அவர்களுடைய அன்பின் விருந்திலே அவனுக்கு வரவேற்பு இருக்காது.

பாவமுள்ள சகோதரனுடன் கிறிஸ்தவர்கள் கலந்து இருக்கக் கூடாது என்று பவுல் சொல்லுகிற அதே வேளையில், நாம் அவனை (ஐக்கியத்திலிருந்து நீக்கப்பட்டவனை), "சத்துருவாக எண்ணாமல்" "சகோதரனாக எண்ணி" அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 3:14, 15). ஐக்கியத்திலிருந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அந்த சகோதரனுடன் "கலந்திருக்கக் கூடாதென்ற" பவுலின் போதனைக்குக் கீழ்ப்படிந்து "அவனைச் சகோதரனாக எண்ணி" புத்தி சொல்ல வேண்டுமானால், அதற்கான மன உறுதி தேவை. சில அளவிடப்பட்ட காரியங்களில் மட்டுமே நாம் அவனுடன் நட்பு கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக, நாம் அவனுடைய வீட்டிற்கு போய் சந்திக்கலாம், சகோதரன் என்ற வகையில் அவனுக்கு புத்தி சொல்வதற்காக மட்டுமே.

## முடிவுரை

சில நேரங்களில் ஒரு சபையிலுள்ள பிரச்சனைகளுக்கு கொரிந்து சபைக்கு கொடுக்கப்பட்ட போதனைகளையே செயல்படுத்தலாம்: ஒழுங்கற்றுத் திரிகிற சபை அங்கத்தினரிடமிருந்து ஐக்கியத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சபைகளுக்குக் கொடுக்கப்படுகிற சிறப்பான ஆலோசனை

*“செயல்படுத்துங்கள்” என்பதுதான்.*

*வைத்தியரிடம் போகிற ஒரு நபரின் உதாரணத்தைக் காண்போம். அங்கு அவன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்று கண்டு பிடிக்கப்படுகிறது. “உனக்கு புற்று நோய் தாக்கியுள்ளது” என்று அவனுக்குச் சொல்லப் படுகிறது. “நாங்கள் உனது புற்று நோயை அகற்றிவிட முடியும், ஆனால் அது செலவுள்ளது, கூடுதல் நேரமாகும், வலியையும் கொடுக்கும். ஆயினும், நான் உன் மீது அதிக அக்கரையுள்ளவனானபடியால், இப்படியொரு கடும் சோதனைக்கு உன்னை உட்படுத்த விரும்பவில்லை - எனவே, அறுவைச் சிகிச்சைக்குப் பதிலாக, ஒரு நாளைக்கு ஒரு ஆஸ்பிரின் மாத்திரையும், படுக்கையிலே நிறைய ஓய்வு எடுக்கவும் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்” என்று சொல்லுகிறார். அந்த நோயாளி என்ன சொல்லுவான்? அவன் நிச்சயமாக மறுப்பு தெரிவித்து: ஆஸ்பிரின் பற்றியும் படுக்கையில் ஓய்வையும் பற்றி என்னிடம் பேச வேண்டாம்! எனக்கு அறுவைச் சிகிச்சை தான் தேவை! என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, எல்லா வலிகளையும் பொறுத்துக் கொள்ளவும், பணச் செலவுகளையும் நான் செய்வேன், என்று சொல்லுகிறான்.*

*அதே போல, சபையில் ஒழுங்கு நடவடிக்கையை செயல்படுத்துவது கடினமான, நேரத்தை எடுக்கும் மற்றும் வலியுள்ளது. ஆகிலும், விளைவாக சபையின் முழு உயிரையும் அது பாதுகாக்கும். வலிமிகுந்த அறுவைச் சிகிச்சையாக இருப்பினும், - முழு சரீரத்தையும் அழிந்து போக விடுவதற்குப் பதிலாக - ஒரு அங்கத்தினரை இழப்பது நலம்!*

---

*குறிப்புகள்*

[1]*வசனம் 1ல் கொரிந்தியர்களை வெட்கப்படுத்தும்படி, மிகைப்படுத்தி பேசுவதாக சிலர் கருதுகின்றனர்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 126.) [2]*“பெற்றோர் - பிள்ளைகளின் சட்டத்துக்குப் புறம்பான உறவு ரோம உலக முழுவதிலும் அருவருப்பாகக் கருதப் பட்டது ... (அ)து எல்லா கலாச்சாரங்களும் ஏற்றுக் கொள்ளும் சில குற்றங்களில் ஒன்று, பயங்கரமானது”* (Craig S. Keener, *The IVP Bible Background Commentary—New Testament* [Downers Grove, Ill.: InterVarsity Press, 1993], 461-62). *இந்தப் பயங்கரமான பாவம் கிரேக்கர் மத்தியில் எப்படி உணரப் பட்டது என்பதற்கு சோஃ போக்கல்ஸ் எழுதிய ஓஎடிபஸ் குறித்த பழங்கதை ஒரு சாட்சியமாய்க் காணுகிறது, அவன் தனக்கே தெரியாமல் தன் தகப்பனாரைக் கொன்று போட்டு தன் தாயை மண முடிக்கிறான். வருடங்கள் பல கடந்து, உண்மை தெரிய வந்த போது, தன் கண்களைத் தானே குருடாக்கிக் கொண்டு, பின்னதாக கொல்லப்பட்டான், அவன் தாயும் தற்கொலை செய்துகொண்டு செத்தாள். கொரிந்துவில் நடந்தவை ஓஎடிபஸ் கதையின் ஒரு பகுதியோ அதே போன்றதோ அல்ல.* [3]*மத்தேயு 7:15; 2 பேதுரு 2:1; 1 யோவான் 4:1-ஐக் காண்க.* [4]*ரோமர் 16:17, உதாரணமாக, சொல்லுகிறது, “நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்துக்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.”* [5]*2 தீமோத்தேயு 2:24-26ஐக் காண்க. பவுல் தொடர்ந்து கள்ளப் போதகர்களையும், கள்ளப் போதகங்களையும் தொடர்ந்து எதிர்த்தார், நடபடிகள் 15-ம் அதிகாரத்திலும் மற்ற எல்லா நிருபங்களிலும் அவருடைய இந்த எதிர்ப்பை நாம் காணலாம்.* [6]*“*[*மூப்பர்கள்*] *எதிர்பேசுகிறவர்களை கண்டனம்*

*பண்ணவும் வல்லவனாயிருக்கும்படி, ... அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்க வேண்டும், அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள்" (தீத்து 1:9ஆ-11). சபை முன்னோடிகள் முதலாவது கள்ளப் போதகர்களின் வாயை அடக்கி, அவர்களுடைய உபதேசத்தைக் கண்டனம் பண்ணவும், இரண்டாவதாக, சபையிலே அவர்கள் போதிக்க அனுமதியாமலும் இருக்கவேண்டும். கள்ளப்போதகர்கள் தொடர்ந்து தனிப்பட்டமுறையில் போதித்து, அதன் விளைவாக சபை பிரிந்தால் அவர்கள் சபையின் சீர்திருத்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். [7]2 யோவான் 7-11. [8]அப்படிப்பட்ட போதகர் சண்டைகளையும் பிரிவினைகளையும் உண்டாக்குகிற பாவத்துக்கு உட்பட்டவர் (கலாத்தியர் 5:20); வசன ரீதியற்ற நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்காக அல்ல, மேலே சொன்ன அப்படிப்பட்ட பாவத்துக்காக, உள்ளூர் சபை அவரிடத்திலிருந்து ஐக்கியத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். [9]2 கொரிந்தியர் 2:5-8ல் பவுலின் போதனை இந்தக் கதைக்கு முடிவுரையாகக் காணப்படுகிறது. [10]யூதர்களிடம் ஒரு மனந்திரும்பாத சகோதரனைப் பற்றி பேசும் போது, இயேசு "அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக" என்றார். யூதர்கள் அப்படிப்பட்டவர்களுடன் கலந்திருக்கவில்லை.*

*[11]ஒரு உள்ளூர் சபை ஐக்கியத்திலிருந்து விலக்குதல் நடவடிக்கையை எடுக்கும் போது, தன்னுடைய சொந்த அங்கத்தினர் மேலே மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு உள்ளூர் சபை மற்றொரு உள்ளூர் சபையின் ஐக்கியத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்வதாகவோ அல்லது மற்றொரு சபையைச் சேர்ந்த அங்கத்தினரை தங்களுடைய சபை ஐக்கியத்திலிருந்து விலக்கி வைப்பதாகவோ சொல்வதற்கு புதிய ஏற்பாடு எந்த ஒரு உதாரணத்தையும் கொடுப்பதில்லை. [12]குற்றஞ் சுமத்தப் பட்டவரின் சரீரத்தைக் கொன்று அழித்துப் போடுவதை இது குறிப்பிடுவதில்லை. பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்கள் குறிப்பிட்ட சில பாவங்களுக்கு உச்சக்கட்டத் தண்டனை வழங்கும்படி கோரப் பட்டனர், ஆனால் ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய - சபைக்கு - புதிய ஏற்பாடு ஒருபோதும் மரண தண்டனை அளிக்கும்படி அதிகாரமளிக்க வில்லை. அந்தச் சிறப்புரிமையெல்லாம் உலகப் பிரகாரமான ஆட்சியாளர்களின் அதிகாரத்துக்கு விடப்பட்டுவிட்டது (ரோமர் 13:1-4). மனந்திரும்பாத பாவிகளை தேவனே தண்டிப்பார். [13]வசனம் 9 "... நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன்" என்கிறது. [14]சபையைச்சாராத காரணங்களுக்காக கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் மற்ற சபை அங்கத்தினர்களுடன் கொள்ளும் நிகழ்ச்சி - உதாரணமாக, ஒரே இடத்தில் ஒரு வியாபாரத்தை செய்யவோ அல்லது பணிபுரியவோ செய்யும் போது - ஐக்கியத்தை விலக்கி வைத்தலினால் பாதிக்கப்படாது.*